# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • அக்டோபர் 5, 2019

Weekly E-paper • OCTOBER 5, 2019




# கடிதம் எழுதுவதே தேசத் துரோகமா?

சுப. வீரபாண்டியன்




## அண்ணா பல்கலைக்கழகத்தில் அறியாமை இருள்

மா.உதயகுமார்

## ஆள்மாறாட்டமே, உன் பெயர் நீட் தேர்வா?

தலையங்கம்




## கருஞ்சட்டையின் வரலாறு


வெற்றிச்செல்வன்


கருஞ்சட்டைத் தமிழர்
ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● அக்டோபர் 5, 2019 Weekly E-paper ● OCTOBER 5, 2019

# கடிதம் எழுதுவதே தேசத் துரோகமா?

● சுப. வீரபாண்டியன்


ராமச்சந்திர குஹா


அடூர் பாலகிருஷ்ணன்


மணிரத்னம்


ரேவதி


அபர்ணா சென்

கடந்த ஜூலை மாதம், வரலாற்றாசிரியர் ராமச்சந்திர குஹா, திரைப்பட இயக்குனர் மணிரத்னம், அடூர் கோபாலகிருஷ்ணன், ஷ்யாம் பெனகல், அபர்ணா சென், ரேவதி உள்ளிட்ட இந்தியாவின் புகழ்பெற்ற 49 ஆளுமைகள், இந்தியப் பிரதமருக்கு ஒரு திறந்த மடல் எழுதினர். சிறுபான்மையினர், தலித் மக்கள் ஆகியோர்,'ஜெய் ஸ்ரீராம்' சொல்லாத காரணத்திற்காக, வடநாட்டில் அடித்துக் கொல்லப்படுவதைப் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டுவருவதும், அந்தக் கொடிய நிகழ்வுகள் நிறுத்தப்பட வேண்டும் என்று கோருவதும் மடலின் நோக்கம்.

கடிதத்தின் விளைவாக, எளிய மக்களை அடித்துக் கொன்ற எவரும் கைது செய்யப்படவில்லை. மாறாக, கடிதம் எழுதிய 49 பேர் மீதும் தேசத்துரோக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. ஒரு சர்வாதிகார நாட்டில் கூட இப்படி இதுவரையில் நடந்ததாகத் தெரியவில்லை.

கடிதம் எழுதியவர்களில் சிலர் இந்திய அரசின் பத்மஸ்ரீ, பத்ம பூஷன், பத்ம விபூஷன் விருதுகள் எல்லாம் பெற்றிருக்கின்றனர். இப்போது தேசத்துரோக விருதும் வழங்கப் பட்டுள்ளது.

குற்றவியல் சட்டம், 124(ஏ) பிரிவின்கீழ் இவர்கள் மீது, பீகார் நீதிமன்றம் ஒன்றில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. அந்தச் சட்டம், ரகசியமாக, தேசத்திற்கு எதிராகச் சதி செய்பவர்கள் மீது வழக்குத் தொடுப்பதற்கான சட்டப் பிரிவு ஆகும். பிரதமருக்குத் திறந்த மடல் எழுதுவது, எப்படி ரகசியமாகச் சதி செய்வதாகும் என்பது நம் போன்ற பாமரர்களுக்குப் புரிய வாய்ப்பில்லை.

தேசத் துரோக வழக்கிற்கான சட்டப் பிரிவு நமக்கு ஒன்றும் புதிது இல்லை. ஆங்கிலேயர்கள் கொண்டு வந்த ரவுலட் சாஸ்திரி சட்டத்தின் மறு பதிப்பும் மலிவுப் பதிப்புகளும்தான் இவை. அந்த ரவுலட் சட்டத்தை எதிர்த்துத்தான் 1919இல் மக்கள் போராடினர். அதனையொட்டியே ஜாலியன் வாலாபாக் படுகொலை நடந்தது.

ஆங்கிலேயர்கள் வெளியேறியவுடன் அந்தச் சட்டமும் வெளியேறிவிடவில்லை. வேறு வேறு பெயர்களில் இன்னும் இங்குதான் உள்ளது. 1960களில் அதற்கு **DIR (Defence of Indian Rules)** என்று பெயர். பிறகு மிசா, என்.எஸ்.ஏ, தடா, பொடா என்று பல்வேறு பெயர்களில் அதே சட்டம் மீண்டும் மீண்டும் உயிர்த்து எழுந்தது. இப்போதும் என்.ஐ.ஏ என்ற பெயரில் அது வந்திருக்கிறது.

மேலே உள்ளவை தனிச்சட்டங்கள். அவை அல்லாமல் இந்தியக் குற்றவியல் சட்டத்திலேயே உள்ள 124 (ஏ) என்பதும் தேசத் துரோகம்தான். அதற்குத் தண்டனைச் சட்டம் 104இன் கீழ் வாழ்நாள் (ஆயுள்) தண்டனையே கொடுக்க முடியும்.

குற்றம் சாட்டப்பட்டவர்களுள் இயக்குநர் மணிரத்னம், நடிகை ரேவதி ஆகியோரைத் தமிழகம் நன்கு அறியும். மணிரத்னம், ரோஜா, பம்பாய், உயிரே போன்ற படங்களில் இஸ்லாமியர்களைத் தேச விரோதிகளாக ஆக்கித் தன் தேசப் பற்றைப் 'பரிபூரணமாக' வெளிப்படுத்தியவர். பாவம், இப்போது அவரையே தேசவிரோத வழக்கில் இணைத்துவிட்டார்கள். நடிகை ரேவதியும் பெரிய தேசப் பற்றாளர்தான். முன்னாள் தலைமைத் தேர்தல் அதிகாரி டி.என்.சேஷனை தனிக் கட்சி தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டவர். அவரும் இப்போது தேசவிரோதி.

இந்த வழக்கை இப்படியே விட்டுவிடாமல், எல்லோரையும் சிறையில் அடைத்துத் தண்டனை வழங்கினால்தான், அடுத்த தேர்தலிலாவது (அப்படி ஒன்று இனி நடந்தால்) நாட்டின் இருள் நீங்கும்! ●

# அண்ணா பல்கலைக்கழகத்தில் அறியாமை இருள்

● மா.உதயகுமார்

அண்ணா பல்கலைக்கழகத்தில் பொறியியல் படிக்கும் மாணவர்களுக்குப் பகவத்கீதை மற்றும் தத்துவவியல் பாடம் அறிமுகப்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அகில இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் பரிந்துரையின்படி இந்த அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

பல மதங்களைச் சேர்ந்தவர்களும், கடவுள் மறுப்பாளர்களும் படிக்கும் கல்வி நிலையங்களில் ஒரு குறிப்பிட்ட மதத்தின் போதனையைப் புகுத்துவது அநீதியாகும். மற்றும் இது அணு அளவுகூடத் தேவையற்றதாகும்.

ஆனால் பகவத் கீதையையும், மற்ற ஆரிய இலக்கியங்களையும் புகுத்துவதை வெறுமனே மதச்சார்பின்மைக்கு எதிரானதாக மட்டும் பார்க்க முடியாது. மனிதனை மனிதன் பிறப்பால் தாழ்வுபடுத்தி, பெண்ணடிமைத்தனத்தை நிலைநிறுத்தி, பார்ப்பனர்களை மட்டும் உயர்த்தும் ஆதிக்கச் சித்தாந்தத்தைக் கருவாகக் கொண்டுள்ள ஒரு நூல் மதச்சார்பின்மைக்கு மட்டும் எதிரானது அன்று. இது மக்களுக்கு எதிரானது. மனிதநேயத்திற்கு எதிரானது.

அறிவியல் படிக்கும் மாணவர்களுக்குத் தத்துவவியல் என்ற பெயரில் அறிவியலுக்கு எதிரான தத்துவங்களான பிறப்பால் உயர்வு தாழ்வு, ஆன்மா, சரணாகதி, நாயக வழிபாடு, மறுபிறவி, எதையும் கேள்விக்குட்படுத்தக் கூடாது என்னும் மனநிலை போன்றவற்றைப் புகுத்துவதால் இது அறிவியலுக்கு எதிரானது.

"சதுர்வர்ணம் மயா சிருஷ்டம்" என்று கீதையில் கிருஷ்ணன் மூலமாகச் சொல்லும் பார்ப்பனர்கள், வர்ணாசிரம தர்மத்தை இங்கு நிலைநிறுத்துவதில் காலந்தோறும் தொடர் சூழ்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அறிவியலும் தொழில்நுட்பமும் அண்டத்தையே அளந்து மதங்களின் மடமைத்தனத்தை வெளிப்படுத்தி வரும் இந்தக் காலகட்டத்திலும் கூட வர்ணாசிரம தர்மம் நவீன முறையில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

உலகம் தொழில்நுட்ப யுகத்திற்கு மாறியது. தொழிலாளர்களும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அந்த வேலையைச் செய்கிறார்கள். அந்த அளவில்தான் மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. இன்னும் அனைத்து நிறுவனங்களிலும் நிர்வாகத் தலைமை, மேலாண்மை, நிதி மேலாண்மை, கொள்கை உருவாக்கம் என அனைத்து அதிகார மட்டங்களிலும் பார்ப்பனர்களே இருக்கிறார்கள். சூத்திரர்கள் அனைவரும் தொழில்நுட்பத்தில் வல்லுநர்கள் தான். ஆனால் சூத்திரக் கயிறு இன்னும் பார்ப்பனர்களிடம்தான் இருக்கிறது.

சமூக நீதிப் போராட்டங்களால் மக்கள் கல்வி கற்றார்கள். அரசு வேலைகளில் அவர்கள் உரிமை பெற்றார்கள். இது ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம்தான் என்றாலும் மக்களின் மனங்களில் இருக்கும் வர்ணாசிரம தர்மம் இன்னும் மாறவில்லை. ஒரு பார்ப்பன அதிகாரிக்குக் கொடுக்கும் மரியாதையை மற்ற சமூகத்தைச் சார்ந்த அதிகாரிகளுக்குக் கொடுப்பதில்லை. பெண்ணின் தலைமையை ஏற்க எந்த ஆணும் விரும்புவதில்லை. ஏன், பெண்களே விரும்புவதில்லை. அதுதான் ஆணாதிக்கம். நாம் தொழில்நுட்ப ரீதியில் வளர்ச்சியடைந்திருக்கிறோம். ஆனால் நாம் செய்யும் வேலைகள் எல்லாம் சூத்திரர்களுக்கு ஒதுக்கப்பட்டதுதான்.




இந்த நிலையை மாற்ற நாம் அறிவியல் மனப்பான்மையை வளர்த்து, பிறப்பால் அனைவரும் சமமே; ஆட்சி, அதிகாரம், அறிவு என்பது பார்ப்பனர்களுக்கு மட்டுமே உரியது அன்று, அது அனைவருக்கும் உரியது என்பதை மக்களுக்கு விளங்க வைக்கப் போராடிவருகிறோம். அவர்கள், தங்கள் இனத்தின் ஆதிக்கத்தை அப்படியே தக்க வைக்க பகவத்கீதையைப் புகுத்துகிறார்கள்.

மேலும் இது போன்ற மதம் சார்ந்த நூல்கள் அடிப்படையில் எந்த ஒன்றையும் ஆராயாமல் நம்பச் சொல்பவை. ஆனால் அறிவியலோ அத்தனையையும் ஆராய்ச்சியின் அடிப்படையில்தான் ஏற்றுக் கொள்ளும். எனவே பொறியியல் படிக்கும் மாணவர்கள் மத நூல்களைப் படித்தால் மந்த நிலையில் தான் இருப்பார்கள். அவர்களால் புதுமையைச் சிந்திக்க முடியாது.

இதனால் அவர்களுக்கும் பயனில்லை. சமூகத்திற்கும் பயனில்லை. ஏனெனில் இத்தனை நூற்றாண்டுகளில் அனைத்து அறிவியல் முன்னேற்றங்களும் மேற்கத்திய நாடுகளில் இருந்துதான் வந்திருக்கிறது. தங்களை மேல்சாதியினர் என்று சொல்லிக் கொள்பவர்கள் யாரும் தந்ததில்லை. பகவத் கீதை படிப்பவர்கள் ஏன் எந்தப் பயனுள்ள அறிவியல் தொழில்நுட்பத்தையும் இவ்வுலகுக்கு வழங்கவில்லை?

பகவத் கீதையால் பயன் கிடைக்கவில்லை. ஆனால் பயங்கரவாதம் கிடைத்திருக்கிறது. "கொலை நூல்" என்று ஆன்மீகவாதிகளாலே கூட வர்ணிக்கப்படும் இந்நூல் மாணவர்களிடம் வன்முறையையே தூண்டும். அவர்கள் தொழில்நுட்பத்தை அழிவு வேலைகளுக்குப் பயன்படுத்த அவர்களைப் பழக்கும். உலக அமைதிக்குக் கேடு விளைவிக்கும். எனவே இது உலக அமைதிக்கு எதிரானது.

பொறியியல் படிக்கும் மாணவர்கப் அறிவியல் மனப்பான்மையோடு சிந்திக்க வேண்டியவர்கள். அவர்கள் மேல் அறியாமைச் சகதியைப் பூசாதீர்கள். அவர்களுக்குத் தத்துவமும் தேவைதான். ஆனால் அவை மதங்கள் சொல்லும் உளறல் தத்துவங்கள் அல்ல. "கடவுளை மற மனிதனை நினை" என்னும் பெரியாரின் உலகத் தத்துவமாகும். ●

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
ஸ்ரீவித்யா

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

## திருச்சி



21-9-2019 அன்று பேரவைப் பொதுச்செயலாளர் தோழர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தலைமையில் திருச்சியில் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருச்சி மாவட்ட அமைப்புக் குழு உருவாக்கப்பட்டது. இதன் ஒருங்கிணைப்பாளராகத் தோழர் மணிவண்ணன் நியமிக்கப்பட்டார். அமைப்புக் குழு உறுப்பினர்களாக தோழர்கள் தினேஷ், பிரபு, சாய், மீனாட்சிசுந்தரம், ராஜேஷ், சண்முகராஜ், வேலுநாச்சியார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## கோவை




29.9.2019 அன்று கோவை, நவஇந்தியா, ஓட்டல் அக்சயம் ஜூபிட்டர் அரங்கத்தில் திராவிட இயக்கத்தமிழர் பேரவையின் சார்பாக நடத்தப்பட்ட அறிவுத்தேடல் 4ஆம் நிகழ்வில் ‘இலத்தீன் அமேரிக்க நாடுகள்’ என்ற தலைப்பில் பொதுச்செயலாளர் தோழர் சுப.வீரபாண்டியன் உரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் பேரவை அவைத் துணைத் தலைவர் பொள்ளாச்சி மா.உமாபதி, மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், திராவிட தமிழர் கட்சியின் தலைவர் வழக்கறிஞர் வெண்மணி, பேராசிரியர் கற்பகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஈரோடு




29.9.2019 அன்று ஈரோட்டில், பெரியார் படிப்பக வாசக வட்டம் சார்பில் நடைபெற்ற பெரியார் பிறந்தநாள் விழாக் கூட்டத்தில், பேரவையின் மாநிலத் துணைப் பொதுச்செயலாளர் தோழர் சிங்கராயர் சிறப்புரையாற்றினார். விழாவில் தோழர்கள் தமிழ்க்குமரன், பெரியசாமி, வீரமணி ஆகியோர் பங்கேற்றனர்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஆள்மாறாட்டமே, உன் பெயர் நீட் தேர்வா?

ஆர்.எஸ்.எஸ். மோடி அரசால் கொண்டுவரப்பட்ட நீட் தேர்வு அலங்கோலப்பட்டுக் கொண்டிருக்கிறது.

நீட் தேர்வு நடத்தப்படும்பொழுது மாணவர்கள் அலங்கோலப்பட்டார்கள், குறிப்பாகப் பெண்கள்.

முழுக்கைச் சட்டை அணிந்து வந்த மாணவியரின் சட்டைகளைக் கிழித்து, சோதனை என்ற பெயரில் அரைக்கைச் சட்டைகளாகக் கத்தரிக்கப்பட்டன.

காலணிகளைக் கழற்றச் செய்தனர். சடை பின்னப்பட்டிருந்த தலை மயிர் அவிழ்க்கப்பட்டு தலைவிரி கோலத்தில் தவிக்கவிடப்பட்டனர்.

கொலுசு, மூக்குத்தி, கழுத்தணிகள் உள்ளிட்ட அனைத்து அணிகலன்களும் கழற்றப்பட்டன. பெண்கள் மேலணியும் துப்பட்டாக்கள் கூடப் பிடுங்கப்பட்டன.ஆடைகளைச் சரி பார்த்தார்கள். ஆளைச் சரி பார்க்காமல் விட்டு விட்டார்கள்.

அதுமட்டுமில்லாமல் தமிழ்நாட்டு மாணவர்கள் கேரளா, ஆந்திரா, ராஜஸ்தான், கர்நாடகா என வேறு மாநிலங்களில் தேர்வெழுத அலைக்கழிக்கப்பட்டனர்.

இத்தகைய அலங்கோலங்களுக்கு இடையில் இப்பொழுது வேறு ஒரு அலங்கோலம் அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

தேனி மருத்துவக் கல்லூரியில், உதித்சூர்யா எனும் மாணவர் நீட் தேர்வில் ஆள் மாறாட்டம் செய்து தேர்வு எழுதியதாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விவகாரம் இப்பொழுது நீதிமன்றத்துக்கும் வந்துவிட்டது.

நீதிமன்றத்தில், நீட் தேர்வில் எத்தனை பேர் ஆள்மாறாட்டம் செய்தனர்? அதன் மூலம் மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கை பெற்றவர்கள் எத்தனை பேர்? நீட் தேர்வு எழுதியவர்களின் அடையாளம், மாணவர் சேர்க்கை பெற்றவர்களின் அடையாளம் சரி பார்க்கப் பட்டதா? ஆள் மாறாட்டம் மோசடி தொடர்பாக வேறு வழக்குகள் கண்டறியப்பட்டனவா? இரட்டை இருப்பிடச் சான்று அளித்து மாணவர்கள் சேர்க்கை பெற்றதுபோல, வேறு வகையில் மோசடி செய்து மாணவர்கள் சேர்க்கை பெற்றுள்ளனரா என்று நீதிமன்றம் கேள்விகளை எழுப்பியிருக்கிறது.

நாடு முழுவதும் 14 லட்சம் பேர் எழுதிய நீட் தேர்வில் ஒரே ஒரு இடைத் தரகர் மட்டும்தான் இந்த முறைகேடுகளைச் செய்துள்ளார் என்று அரசு தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் சொல்லியிருப்பது நம்பும்படியாக இல்லை.


இந்த முறைகேடு அரசு அதிகாரிகளின் ஆதரவு இல்லாமல் நடந்திருக்க முடியாது.

பணம் கைமாறாமல், லஞ்சம் இல்லாமல் இத்தகைய மாபெரும் மோசடி நடந்திருக்க வாய்ப்பில்லை. ஏழை நடுத்தர மாணவர்களின் மருத்துவக் கல்வியை சீரழிக்க வந்த நீட் தேர்வு இன்று மக்கள் முன்னால் அலங்கோலமாகச் சீரழிந்து கொண்டிருக்கிறது.

இதை மோடிக்குச் ‘சமர்ப்பணம்’ செய்வோம்.

# கருஞ்சட்டையின் வரலாறு

● வெற்றிச்செல்வன்



**1944** ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில்தான், தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயர் திராவிடர் கழகமாக மாற்றப்பட்டது என்பதை நாம் அறிவோம். அதற்கு அடுத்த ஆண்டு, அதாவது 1945இல் நடைபெற்ற மாநாடும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அந்த மாநாட்டில்தான் கருஞ்சட்டைப் படை ஒன்றை அமைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

திருச்சியில் 29.09.1945, 30.09.1945 ஆகிய இரு நாட்களில் 17வது திராவிடர் கழக மாகாண மாநாடும், நான்காவது மாகாண சுயமரியாதை மாநாடும் நடைபெற்றன.

திராவிடர் கழக மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 25 தீர்மானங்களில் ஒன்று தொண்டர்படை அமைப்பது தொடர்பானது.

‘திராவிடரின் விடுதலைக்காகப் போரிடவும், சகலவித நடவடிக்கைக்கும் தயாராக இருக்கவும் இசையும் ஒரு மாகாண திராவிட விடுதலைப்படை **(Dravidian Freedom Force)** அமைக்க வேண்டுமென்று இந்த மாநாடு தீர்மானிக்கிறது’. (குடிஅரசு, 06.10.1945).

இதனையடுத்து, 20.10.1945 நாளிட்ட ‘குடிஅரசு’ ஏட்டில் கருஞ்சட்டைப்படை குறித்த அறிவிப்பையும், விளக்கத்தையும் வெளியிடுகிறார் தந்தை பெரியார். படையில் சேர்ந்து தொண்டாற்ற ஆசை கொள்ளுபவர்கள் இப்போது நிலைகுலைந்து மானமற்று கீழ்மைப்பட்டுக் கிடக்கும் திராவிட மக்கள் தங்கள் நிலை உணர்ந்து, தலைநிமிர்ந்து, மான உணர்ச்சி பெற்று, மனிதத் தன்மை அடைய வேண்டும் என்கின்ற அவாவுடன், அதற்கு அவசியமான எந்தக் காரியத்தையும் செய்யவும், அதனால் ஏற்படும் எப்பலனையும் அனுபவிக்கவும் முழுமனதுடன் ஆயத்தமாயிருக்க வேண்டியவர்களாவார்கள் என்று தெரிவிக்கும் பெரியார், கருப்புச்சட்டை என்பது எப்படியிருக்க வேண்டும் என்ற வரையறையையும் தருகிறார். ‘கருப்புச்சட்டை என்பது இடுப்பில் வெள்ளை வேஷ்டி அல்லது (பைஜாமா என்னும்) கால்சட்டை அணிந்து உடலுக்குக் கருப்பு அரைக்கைச் சட்டை அணிந்து கொண்டிருப்பதாகும். கருப்புச்சட்டை எப்போதும் அணிந்து கொள்ள வேண்டும். (குடிஅரசு, 20.10.1945)

கருப்புச் சட்டை அணிவதன் நோக்கத்தை வலியுறுத்தியும், கருப்புச்சட்டை தொடர்பான விமர்சனங்களைப் புறந்தள்ளியும் ‘குடிஅரசில்’ பெரியார் தொடர்ந்து எழுதுகிறார்.

‘கருப்புச் சட்டைப் படை அரசியலில் ஏதாவது தீவிரக் கிளர்ச்சி செய்யவோ, ஓட்டுப் பெறவோ அல்லது ஏதாவது ஒரு மக்கள் மீது வெறுப்புக் கொண்டு யாருக்காவது தொல்லை கொடுக்கவோ, அல்லது நாசவேலை செய்து நம் மக்களையே பலி கொடுக்கவோ, நம் பொருளை பாழாக்கிக்கொள்ளவோ அல்ல என்பதைத் தெளிவாக வலியுறுத்திக் கூறுவோம். மற்றபடி அப்படை எதற்காக என்றால் இழிவு கொண்ட மக்கள் தங்கள் இழிவை உணர்ந்து வெட்கமும், துக்கமும் அடைந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டவும், அவ்விழிவை நீக்கிக் கொள்ள தங்கள் வாழ்வை ஒப்படைக்கத் தயாராய் இருக்கிறார்கள் என்பதைக் காட்டவும், அதற்கான முயற்சிகளைச் செய்ய, தலைவர் கட்டளையை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள் என்பதைக் காட்டவுமே ஏற்படுத்தப்பட்டிருப்பதாகும்’ (குடிஅரசு 17.11.1945).

> “ கருப்புச் சட்டைப் படை எதற்காக என்றால் இழிவு கொண்ட மக்கள் தங்கள் இழிவை உணர்ந்து வெட்கமும், துக்கமும் அடைந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டவும், அவ்விழிவை நீக்கிக் கொள்ள தங்கள் வாழ்வை ஒப்படைக்கத் தயாராய் இருக்கிறார்கள் என்பதைக் காட்டவும், அதற்கான முயற்சிகளைச் செய்ய, தலைவர் கட்டளையை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள் என்பதைக் காட்டவுமே ஏற்படுத்தப்பட்டிருப்பதாகும்’ ”

மேலும், ‘பெண்களும் இப்படையில் சேரலாம். அவர்கள் கருப்புச் சேலை அல்லது குறைந்த அளவு கருப்பு ரவிக்கையையே சதா அணிந்து கொள்ள வேண்டும்’ என்று பெண்களுக்கும் அழைப்பு விடுக்கிறார்.

திராவிடர் கழகத்தின் கருஞ்சட்டைப் படை மாநாடு 11.05.1946, 12.05.1946 ஆகிய நாட்களில் மதுரையில் நடைபெற்றபோது மாநாட்டுப் பந்தல் வன்முறையாளர்களால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. திராவிடர் கழகக் கொடிகள் கொளுத்தப்பட்டன. மாநாட்டில் பங்கேற்றோர் மீது வன்முறைத் தாக்குதல்கள் நடந்தன. கருப்புச் சேலை அணிந்த ஒரு பெண் தோழர் நிர்வாணமாக்கப்பட்டார். ஏ. வைத்தியநாத அய்யர்தான் வன்முறையாளர்களுக்குப் பணம் கொடுத்துத் தூண்டிவிட்டார் என்ற சந்தேகம் ஏற்பட்டதாக ‘குடிஅரசு’ (18.05.1946) எழுதிற்று.

இவ்வாறாக இயக்கத் தோழர்களின் கொள்கை உணர்வாலும், தியாகத்தாலும் வளர்ந்தது திராவிட இயக்கம். திராவிட இயக்கக் குறியீடான கருஞ்சட்டையின் 75வது ஆண்டு தொடங்குகிறது.

நாம் நினைவில் கொள்ள வேண்டிய பெருமிதத் தருணம் இது. ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,